## 8.45 ஊராட்சி ஒன்றிய வாகனங்களுக்கான எரிபொருள் மாத ஒதுக்கீட்டை உயர்த்துதல்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மாஅதி 4) துறை

அரசாணை (நிலை) எண். 127

நாள் : 12.07.2007
படிக்க :

இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ், கடித எண். 28998/2007/ பொது 3.4 நாள். 24.04.2007.

**ஆணை**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் 12.04.2007 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை மான்யக் கோரிக்கை மீது கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்

> ''ஊரக வளர்ச்சிப் பணிகளை செம்மையாக கண்காணிக்க, தற்போது வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள வாகனங்களுக்கு வழங்கப்படும் எரிபொருள் போதுமானதாக இல்லாததால், 2007–2008 ஆம் ஆண்டிலிருந்து, இரு வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் மாத எரிபொருள் ஒதுக்கீடு தலா 100 லிட்டரிலிருந்து 150 லிட்டராகவும், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்களுக்கு மாத எரிபொருள் ஒதுக்கீடு 75 லிட்டரிலிருந்து 100 லிட்டராகவும், உயர்த்தி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது''.

2. இந்த அறிவிப்பிற்கிணங்க ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர் அவர்கள் விரிவான கருத்துருவினை அரசுக்கு அனுப்பி உள்ளார். மத்திய மற்றும் மாநில அரசின் பல்வேறு திட்டங்களான வறுமை ஒழிப்பு திட்டங்கள், வேலை உறுதி திட்டம், துப்புரவு, அடிப்படை வசதிகள் உருவாக்குதல் போன்ற திட்டங்களை செயல்படுத்த வேண்டிய பொறுப்பு ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையை சார்ந்தது ஆகும் என்றும் அரசின் முக்கிய திட்டங்களான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம், சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம், பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், முழு சுகாதார இயக்கம், நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பல திட்டங்கள் ஊரக வளர்ச்சி துறையால் செயல்படுத்தப்படுகின்றன என்றும் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்த வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (ஊராட்சி ஒன்றியம்) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (கிராம ஊராட்சி) ஆகியோர் முக்கிய அலுவலர்கள் ஆவார்கள் என்றும் இவர்கள் திட்டங்களுக்கு தேவைப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் கோருதல், அதற்கான பணி உத்தரவு வழங்குதல் பணிகள் சரியான முறையில் தரத்தோடு நடைபெற்றுள்ளதா என்பதை ஆய்வு செய்து உறுதிசெய்தல் மற்றும் பணியினை செயல்படுத்தும் முகமைகளுக்கு நிதியை விடுவிப்பது, போன்ற முக்கிய பணிகளை செய்கின்றனர் என்றும் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர் தெரிவித்துள்ளார். அதேபோல் ஊராட்சி ஒன்றிய தலைவர் ஊராட்சி ஒன்றியக்குழுவின் தலைவரும் என்பதால் ஊராட்சி ஒன்றிய பொதுநிதி சரியான முறையில் பயன்படுத்தப்படுகிறதா என்றும் ஊராட்சி ஒன்றிய குழு மூலம் செயல்படுத்தும் வேலைகள் முறையாக நடைபெறுகிறதா என்பதையும் கண்காணிக்கும் பொறுப்பும் அப்பணிகளை ஆய்வு செய்ய வேண்டிய அவசியமும் உள்ளது என்றும் மேற்கண்ட காரணங்களால் தற்போது வாகனங்களின் எரிபொருள் ஒதுக்கீடு போதுமானதாக இல்லை என்றும், எனவே வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சி ஒன்றியம்) வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) மற்றும் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்களுக்கான வாகன எரிபொருள் ஒதுக்கீட்டை பின்வருமாறு அதிகரித்து ஆணையிடுமாறு ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர் அரசிடம் கோரியுள்ளார்.

(1) ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் வாகன உபயோகத்திற்கு எரிபொருள் 75 லிட்டரிலிருந்து 100 லிட்டர் ஆக அதிகரிக்க வேண்டும்.

(2) வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சி ஒன்றியம்) வாகன உபயோகத்திற்கு எரிபொருள் 100 லிட்டரிலிருந்து 150 லிட்டர் ஆக அதிகரிக்க வேண்டும்.

(3) வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) வாகன உபயோகத்திற்கு எரிபொருள் 100 லிட்டரிலிருந்து 150 லிட்டர் ஆக அதிகரிக்க வேண்டும்.

3. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது. அதன்படி, ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர், வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சி ஒன்றியம்) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்களின் வாகனங்களுக்கான எரிபொருள்

மாத ஒதுக்கீட்டை கீழ்க்கண்டவாறு உயர்த்தி அரசு ஆணையிடுகின்றது.

(1) ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் வாகன உபயோகத்திற்கு எரிபொருள் 75 லிட்டரிலிருந்து 100 லிட்டர் ஆக உயர்த்தப்படுகின்றது.

(2) வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சி ஒன்றியம்) வாகன உபயோகத்திற்கு எரிபொருள் 100 லிட்டரிலிருந்து 150 லிட்டர் ஆக உயர்த்தப்படுகின்றது.

(3) வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) வாகன உபயோகத்திற்கு எரிபொருள் 100 லிட்டரிலிருந்து 150 லிட்டர் ஆக உயர்த்தப்படுகின்றது.

4. மேற்கண்ட வாகன எரிபொருள் ஒதுக்கீட்டை உயர்த்துவதால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சி ஒன்றியம்) மற்றும் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் ஆகியவர்களை பொறுத்தவரை மாநில நிதிக்குழு மான்யத் தொகை (State Finance Commission Grant) அடங்கிய ஊராட்சி ஒன்றிய பொதுநிதியிலிருந்து (Panchayat Union General Fund) செலவு செய்ய அரசு அனுமதி அளிக்கிறது. வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) வாகன எரிபொருள் செலவினத்தைப் பொறுத்தவரை, மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கு மாநில நிதிக்குழு மான்யத் தொகையை பிரித்து வழங்கும் முன் வட்டார வளர்ச்சி அலுவலருக்கான (கிராம ஊராட்சி) வாகன எரிபொருள் செலவுத் தொகையை பிடித்தம் செய்து, அதை ஒவ்வொரு வட்டார அளவில் ஒரு தனி வங்கி கணக்கில் வைத்து பராமரித்து, எரிபொருள் செலவு செய்ய பயன்படுத்த வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது. இந்த வங்கி கணக்கை வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) இயக்குவார்.

5. இது சம்மந்தமாக மாவட்ட அளவில் தக்க நடவடிக்கை எடுக்க தேவையான அறிவுரைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறை அ.சா.கு. எண். 140/துசெ.APA/2007, நாள். 22.06.2007 இசைவுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்